8 விமானங்கள் திடீர் ரத்து: பயணிகள் அவதி

சென்னை, மே 9: சென்னை விமான நிலையத்தில் வருகை, புறப்பாடு என மொத்தம் 8 ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் வியாழக்கிழமை திடீரென ரத்து செய்யப்பட்டதால், பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

டாடா குழுமம் வசம் உள்ள ஏர் இந்தியா மற்றும் விஸ்தாராவை இணைத்து ஒரு நிறுவனமாகவும், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஏஐஎக்ஸ் கனெக்ட் நிறுவனத்தை இணைத்து ஒரு நிறுவனமாகவும் மாற்ற மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த சில நாள்களாக நாடு முழுவதும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஊழியர்கள் விடுப்பு எடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், நாடு முழுவதும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான சேவை பாதிக்கப்பட்டது.

8 விமானங்கள் ரத்து: சென்னை விமான நிலையத்தில் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனத்தின் கேபின் குழு ஊழியர்கள் பலர் வியாழக்கிழமை திடீர் விடுப்பு எடுத்துக்கொண்ட காரணத்தால், விமானங்களை இயக்க விமானிகள், பொறியாளர்கள் இல்லாமல், மொத்தம் 8 ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

அதன்படி, சிங்கப்பூர், திருவனந்தபுரம், கொல்கத்தா ஆகிய பகுதிகளில் இருந்து 2 விமானங்கள் என சென்னைக்கு வியாழக்கிழமை வரவேண்டிய 4 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

அதேபோல் சென்னையிலிருந்து திருவனந்தபுரம், சிங்கப்பூர், கொல்கத்தாவுக்கு செல்லும் 2 விமானங்கள் என மொத்தம் 4 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

விமானத்தில் இயந்திர கோளாறு: நூலிழையில் தப்பிய 376 பயணிகள்

சென்னை, மே 9: சென்னையில் இருந்து துபை செல்ல வேண்டிய 'எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ்' பயணிகள் விமானத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு தக்க நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் 376 பயணிகள் உயிர் தப்பினர்.

சென்னையில் இருந்து துபைக்கு 'எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ்' விமானம் இரவு 10.30 மணிக்கு ஒடுபாதையில் புறப்பட தயாராக இருந்தது.

அதற்கு முன்னதாக விமானி இயந்திரங்களை சரிபார்த்த போது விமானத்தில் இயந்திர கோளாறு இருந்தது தெரியவந்தது.

இதனால், விமானி உடனடியாக சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து விமானத்தில் ஏற்பட்ட கோளாறை சரி செய்யும் பணி நடைபெற்றது.

இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டு, விமானத்தில் இருந்த 376 பயணிகளும் தப்பினர்.

இந்த நிலையில், நள்ளிரவை கடந்தும் விமானத்தில் கோளாறு சரி செய்ய முடியாததால், அந்த விமானம் ரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து பயணிகள் அனைவரும் சென்னை நகரில் உள்ள பல்வேறு ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டனர். சில பயணிகள், வேறு தேதியில் பயணம் செய்வதாக, பயண தேதியை மாற்றிக்கொண்டனர்.

10 போக்குவரத்து சிக்னல்களில் நிழல் பந்தல்

ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆய்வு

சென்னை ரிப்பன் கட்டட சந்திப்பு ராஜா முத்தையா சாலை சிக்னலில் அமைக்கப்பட்டுள்ள நிழல் பந்தலை வியாழக்கிழமை பார்வையிட்டு, வாகன ஓட்டிகளிடம் கேட்டறிந்த பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன். உடன், தலைமைப் பொறியாளர் எஸ்.ராஜேந்திரன்.

சென்னை, மே 9: சென்னையில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், வாகன ஓட்டிகளின் நலனுக்காக முதல்கட்டமாக 10 போக்குவரத்து சிக்னல்களில் நிழல் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ரிப்பன் கட்டட சிக்னலில் மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள பசுமை பந்தலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் வியாழக்கிழமை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

பொதுமக்கள் கோடை கால வெப்பத்தால் அதிகம் பாதிக்கப்படுவதால் மாநகராட்சி சார்பில் முதல்கட்டமாக முக்கியமான போக்குவரத்து சிக்னல்களில் 6 மீட்டர் நீளம் 5.5 மீட்டர் உயரம் கொண்ட பசுமை பந்தல் சுமார் ரூ. 40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சில வாகன ஓட்டிகளின் வேண்டுகோளின்பேரில், நெடுஞ்சாலைகளில் உள்ள போக்குவரத்து சிக்னல்களிலும் இதுபோன்ற நிழல் பந்தல்கள் அமைக்க நெடுஞ்சாலைத் துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையில் வெயிலின் தாக்கம் மே 28-ஆம் தேதி வரை இருக்கும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, மாநகராட்சிப் பகுதிகளில் 199 இடங்களில் தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், மருத்துவப் பணியாளர்களின் மேற்பார்வையில் 299 இடங்களில் ஓஆர்எஸ் கரைசல் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 1,44,527 பேருக்கு ஓஆர்எஸ் கரைசல் வழங்கப்பட்டுள்ளன. நிழல் பந்தல்கள் அமைக்க விருப்பம் தெரிவிக்கும் தன்னார்வ அமைப்புகளின் ஒத்துழைப்புடனும் பல இடங்களில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்துக்கு கிடைக்கும் வரவேற்பைப் பொருத்து மழைக் காலங்களிலும் இந்த மேற்கூரைகளை 'பைப்பர்' பந்தல்களாக மாற்றி அமைக்க திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர்.

இந்த ஆய்வின்போது, சென்னை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் எஸ். ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

'வீடுகளில் நாய் வளர்க்க உரிமம்: மக்களிடையே விழிப்புணர்வு இல்லை'

வீடுகளில் நாய்கள் வளர்க்க முறையாக உரிமம் பெறுவது குறித்த விழிப்புணர்வு மக்களிடையே இல்லை என்று ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் கூறியது: வீடுகளில் நாய்கள் வளர்க்க முறையாக உரிமம் பெறுவது கட்டாயம். ஆனால் அது குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிக அளவில் கிடையாது. எனவே, இது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

சென்னை ஆயிரம்விளக்கு பூங்காவில் சிறுமியை வளர்ப்பு நாய்கள் கடித்த விவகாரத்தில் உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். சிறுமிக்கு முறையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மதுரைக்கு அப்புறப்படுத்தப்பட்ட 'ராட் வெய்லர்' நாய்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். நாய்க் கடிக்கு ஆளாகுபவர்களின் நிலை குறித்து, நாய்களை வளர்ப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

வீட்டில் வளர்க்கும் விலங்குகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆகையால் வீட்டில் செல்லப்பிராணிகள் வளர்ப்பவர்கள்தான் சமூக பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

தற்போது நாய்க் கடி சம்பவம் குறித்த செய்திகள் அதிக அளவில் பரவி வருவதைத் தொடர்ந்து நாய் வளர்ப்பவர்கள், அதற்கு பதிவு செய்வது அதிகரித்துள்ளது. செல்லப்பிராணிகளை வீட்டில் வளர்ப்பவர்கள் ஆன்லைன் மூலம் சுலபமாக பதிவு செய்யலாம். மேலும், விரைவில் இதற்காக சிறப்பு முகாம்களும் அமைக்கப்படும் என்றார் அவர்.

முன்னதாக நாய்கள் கடித்து பலத்த காயமடைந்த சிறுமி சுரக்ஷாவுக்கு வியாழக்கிழமை தனியார் மருத்துவமனையில் 'பிளாஸ்டிக் சர்ஜரி' வெற்றிகரமாக செய்யப்பட்டது. அவரை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

நாய் கடித்து தம்பதி காயம்: சென்னையில் தொடரும் அச்சம்

சென்னை, மே 9: சென்னை சூளைமேட்டில் நாய் கடித்ததில் தம்பதி காயமடைந்தனர்.

சென்னை சூளைமேடு சர்புதீன் தெருவைச் சேர்ந்தவர் சுரேஷ் (43). தனியார் நிறுவனத்தில் பணியாற்று இவர், தனது மனைவி நீலாவுடன் (40) புதன்கிழமை மாலை தனது வீட்டு அருகே உள்ள கடையில் பொருள்களை வாங்கி விட்டு, வந்துகொண்டிருந்தார்.

அப்போது, அதே பகுதியில் வசிக்கும் மல்லிகா என்பவர் வளர்க்கும் ஒரு நாய் நீலாவை கடித்துள்ளது. சுரேஷ், நாயை விரட்ட முயன்றபோது, அவரையும் அந்த நாய் கடித்துள்ளது.

சப்தம் கேட்டு அங்கு வந்த அந்தப் பகுதி மக்கள், நாயை விரட்டிவிட்டு இருவரையும் மீட்டனர். பின்னர், இருவரும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது குறித்து நீலா சூளைமேடு காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

ஆயிரம் விளக்கு பகுதியில் சில நாள்களுக்கு முன் இரு ராட் வெய்லர் இனத்தைச் சேர்ந்த இரு நாய்கள் கடித்து சிறுமி பலத்த காயமடைந்த நிலையில், ஆலந்தூர், நாவலூரில் அடுத்தடுத்து இரு இடங்களில் நாய்கள் கடித்து ஒரு சிறுவனும், 10 மாத குழந்தையும் செவ்வாய்க்கிழமை காயமடைந்தது பொதுமக்களை அதிர்ச்சிக்குள்ளாகியது.

இந்த நிலையில், மூன்றாவது சம்பவமாக மீண்டும் ஒரு நாய் கடித்து தம்பதி காயமடைந்தது பொதுமக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

'ஹீட் ஸ்ட்ரோக்' பாதிப்பு: மூதாட்டிக்கு தீவிர சிகிச்சை

சென்னை, மே 9: ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்புக்குள்ளான மூதாட்டி ஒருவருக்கு சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சில நாள்களுக்கு முன்பாக விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூரைச் சேர்ந்த கூலித் தொழிலாளி ஒருவர் நேரடி வெயிலில் பணியாற்றியபோது மயக்கமடைந்து சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டதன் பயனாக அவர் குணமடைந்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக வேலூர் மாவட்டம், வாணியம்பாடியைச் சேர்ந்த குமாரி (70) என்ற மூதாட்டி வெப்ப அலை பாதிப்புக்குள்ளாகி கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பு வார்டில் அனுமதிக்கப்பட்டார்.

படிப்படியாக அவரது உடல் நிலை மோசமடைந்ததால் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு செயற்கை சுவாச உதவியுடன் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக மருத்துவமனை முதல்வர் டாக்டர் எ.தேரணிராஜன் கூறியதாவது:

வெயிலால் இணைநோயாளிகள், முதியவர்கள், குழந்தைகள் மட்டுமல்லாது தற்போது இளைஞர்களும் ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

அவ்வாறு கடந்த சில நாள்களுக்கு முன்பாக உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவர், கட்டுமானப் பணி செய்தபோது வெப்ப அலை தாக்கத்துக்குள்ளாகி உயிரிழந்தார்.

தற்போது ஒரு மூதாட்டிக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த சில வாரங்களாக தட்பவெப்ப நிலை சார்ந்த நோய்த் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனையை நாடுவோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

அதைக்கருத்தில்கொண்டு, விழிப்புணர்வுடன் பொதுமக்கள் செயல்பட வேண்டும். நாள்தோறும் குறைந்தது 4 லிட்டர் தண்ணீர் பருக வேண்டும். நீர்ச்சத்து இழப்பு ஏற்பட்டால் உடனடியாக ஓஆர்எஸ் கரைசலை பருகுவது அவசியம் என்றார் அவர்.

BEFORE MR. SAMRAT NIGAM SOLE ARBITRATOR. IN THE MATTER OF ARBITRATION BETWEEN:

Axalta Coating Systems India Pvt Ltd ..... Claimant

Versus

Amra Motors Pvt. Ltd ..... Respondent

NOTICE FOR SERVICE THROUGH PUBLICATION

M/s Amra Motors Pvt Ltd
Through its Directors
Registered Address:
96, W-1, Adarsh Jeevan Apartments,
Avadhanam Pillai Road, Choolai,
Chennai-600112

The above Company is put to notice that an Arbitration Claim has been filed by Axalta Coating Systems India Pvt Ltd, which is pending before the Arbitral Tribunal. The Arbitral Tribunal was appointed by the Hon'ble High Court of Delhi vide Order dated 03.03.2023 passed in Arbitration Petition No. 1354/2022 title "Axalta Coating Systems India Pvt Ltd vs Amra Motors Pvt. Ltd.".

Through this Publication you are put to notice that you are required to appear in person or through a Lawyer before the Arbitral Tribunal on 22.05.2024 at 5:00 p.m. at N-2 Green Park Main, New Delhi failing which the Arbitral Tribunal shall proceed with the proceedings in your absence you all will be proceeded ex-parte.

-Sd-
Samrat Nigam

IN THE HON'BLE SUB COURT AT POONAMALLEE
O.S.No. 185 of 2023

BANK OF INDIA Avadi Branch,
No.2259, HIG Type, TNHB Main Road,
Avadi, Chennai 600054
Represented by its
Senior Branch Manager
... PLAINTIFF

Vs

Mr.S.Prabakaran, S/o.Mr.Sundaram
Aged about 48 years
Residing at No.34/24, Periyar Nagar,
Thiruvottiyur,Chennai 600 019
...DEFENDANT

To,
Mr.S.Prabakaran S/o.Mr.Sundaram Residing at No.34/24, Periyar Nagar, Thiruvottiyur, Chennai 600 019.

Please take notice that **Bank of India, Avadi Branch** has filed the above referred suit against you in **O.S. No.185 of 2023 before Hon'ble Sub Court at Poonamallee** for recovery of money.

Whereas the service of summons could not be effected in the ordinary manner hence paper publication has been ordered by the Hon'ble Court, returnable by **24.06.2024**

Kindly make yourself convenient to be present before the said Court either in person or through your counsel on **24.06.2024 at 10.30.A.M.** without fail, failing which, the matter will be decided in your absence.

S.R.Sudhanraj
Counsel for Plaintiff

வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME

CHANGE OF NAME

I, **MOHAGANAMBAL**, daughter Of **DHANAPAL REDDY MUNU SWAMY, (Ex Army) Service No. JC 98881X, RANK- SUBEDAR**, residing at No.34, Sabi Nagar, 4th street, Muthapudhupettai, IAF, Avadi, Chennai - 600055, have changed my name from MOHAGANAMBAL to **M.MOHANAMBAL** vide Affidavit dated 07/05/2024.

சுந்தரம் மியூச்சுவல்

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) மற்றும் முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) ஆகியவற்றுடன் கூடிய சேர்க்கை அறிவிப்பு

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் தயாரிப்பு லேபிளிங்கின் ('ரிஸ்க்-ஓ-மீட்டர்') திருத்தம்

SEBI சுற்றறிக்கை எண். SEBI/HO/IMD/DF3/CIR/P/2020/197, நாள் அக்டோபர் 05, 2020-ன் படி சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ("நிதி") திட்டங்களின் ரிஸ்க்-ஓ-மீட்டர் கீழுக்கண்டவாறு திருத்தப்படும் என முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

திட்டத்தின் பெயர்	தற்போதுள்ள ரிஸ்க்-ஓ-மீட்டர் (மார்ச் 31, 2024 இன் படிக் போர்ட்ஃபோலியோவின் அடிப்படையில்)	திருத்தப்பட்ட ரிஸ்க்-ஓ-மீட்டர் (ஏப்ரல் 30, 2024 இன் படிக் போர்ட்ஃபோலியோவின் அடிப்படையில்)
சுந்தரம் அல்ட்ரா ஷார்ட் டியுரேஷன் ஃபண்ட்		
சுந்தரம் ஈக்விட்டி சேவிங்ஸ் ஃபண்ட்		

மேலே குறிப்பிட்டுள்ளபடி ரிஸ்க்-ஓ-மீட்டர்களில் ஏற்பட்ட மாற்றத்தைத் தவிர, இயற்கை, முதலீட்டு நோக்கம், செலுத்து ஒதுக்கீடு முறை, மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளிட்ட திட்ட அம்சங்களில் வேறு எந்த மாற்றமும் இல்லை என்பதை முதலீட்டாளர்கள் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவலின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவலின் அறிக்கை மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் அறிக்கை (SAI)யின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
செயலர் & கம்பெனியின் ஆஃப்

இடம்: சென்னை
தேதி: மே 10, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓல்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), 044 4083 1500 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
ஃபேக்ஸ்: +91 44 2841 8108. www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

Shanthi Gears

சாந்தி கியர்ஸ் லிமிடெட்
CIN: L29130TZ1972PLC000649
பதிவு அலுவலகம் 304-ஏ, திருச்சி சாலை, சிங்காநல்லூர், கோயம்புத்தூர்-641 005, தமிழ் நாடு. Tel: +91-422-4545745
Fax: +91-422-4545700, Email: waltervasanthpj@shanthigears.murugappa.com, Website: www.shanthigears.com
murugappa

மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

₹ கோடிகள்

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஆண்டு	
		31.03.2024	31.12.2023	31.03.2023	31.03.2024	31.03.2023
		தணிக்கை செய்யப்படாதது (பார்க்க குறிப்பு 3)	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது (பார்க்க குறிப்பு 3)	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது
1	செயல்பாடுகளின் மூலம் வருவாய்	153.84	125.54	123.40	536.05	445.65
	இதர வருவாய்	9.52	3.61	2.78	21.06	11.24
	மொத்த வருவாய்	**163.16**	**129.15**	**126.18**	**557.11**	**456.89**
2	**செலவுகள்**					
	(a) நுகரப்படும் பொருட்களின் விலை	74.21	66.57	57.10	262.26	214.18
	(b) முடிக்கப்பட்ட பொருட்களின் சரக்குகளில் மாற்றங்கள் மற்றும் வேலை நடந்து கொண்டிருக்கிறது	(0.38)	(5.29)	1.87	(5.63)	0.12
	(c) பணியாளர் நன்மைக்கான செலவுகள்	17.56	17.75	17.70	76.83	71.15
	(d) தேய்மானம் மற்றும் தேய்மான செலவு	4.22	3.01	2.88	13.21	10.88
	(e) இதர செலவுகள்	35.64	23.16	20.08	100.80	70.37
	மொத்த செலவுகள்	**131.25**	**105.20**	**99.63**	**447.47**	**366.70**
3	**வரிக்கு முன் லாபம் (1-2)**	**31.91**	**23.95**	**26.55**	**109.64**	**90.19**
4	**வரி செலவுகள்**					
	நடப்பு வரி	6.82	6.75	8.98	28.04	25.40
	தள்ளி வைக்கப்பட்ட வரி	(0.59)	(0.23)	(1.90)	(0.65)	(2.26)
	மொத்த வரி செலவுகள்	**6.23**	**6.52**	**7.08**	**27.39**	**23.14**
5	**வரிக்கு பின் லாபம் (3-4)**	**25.68**	**17.43**	**19.47**	**82.25**	**67.05**
6	**மொத்த விரிவான நஷ்டம் (நிகர வரி)**					
	அறிவிக்கத்தகு மதிப்பிடுதல்களாக உருப்படிகள் அடுத்தடுத்த காலகட்டங்களில் லாபம் மற்றும் இழப்பு					
	வழு-அளவீடு ஆதாயம்/(இழப்பு) வரையறுக்கப்பட்ட நன்மைக்கடமைகள் (நிகரம்)	(2.45)	0.42	(1.69)	(1.20)	(2.21)
	வழுவளவிடுதலுடனான பொருள் தொடர்பான வருவாய் வரி அடுத்தடுத்த காலகட்டங்களில் லாபம் மற்றும் இழப்பு அதிகமல	0.61	(0.10)	0.43	0.30	0.56
	இணைவுதிரள்கள்/ஆண்டு மொத்த விரிவான நஷ்டம்	(1.84)	0.32	(1.26)	(0.90)	(1.65)
7	**இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (5+6)**	**23.84**	**17.75**	**18.21**	**81.35**	**65.40**
8	சமவிநியோக மூலதனம் (முக மதிப்பு தலா ரூ.1)	7.67	7.67	7.67	7.67	7.67
9	கையிருப்பு மற்றும் உபரி (இதர சமநிலை)				337.64	294.68
10	ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ. 1 (காலாண்டுகளை ஆண்டு வரிதுல செய்யப்படவில்லை)					
	அடிப்படை EPS ரூ. :	3.35	2.27	2.54	10.72	8.74
	குறைவு EPS ரூ. :	3.35	2.27	2.54	10.72	8.74

குறிப்பு:

1. மேற்கண்ட நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, 09 மே 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, நிறுவனத்தின் சட்டபூர்வ தணிக்கையாளர்களால் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த தணிக்கை செய்யப்பட்ட முழுமையான நிதி முடிவுகள், நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்), நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015 இன் பிரிவு 133 இன் கீழ் அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகள் (Ind AS) இன் படி தொடர்புடைய திருத்தங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன்பிறகு வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் சுற்றறிக்கை பிற தொடர்புடைய விதிகள், பொருந்தும் மற்றும் செபி (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015 இன் கீழ் இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் செபி வழங்கிய வழிகாட்டுதல்கள் திருத்தப்பட்டன.
2. நிறுவனத்தின் முக்கிய வணிகம் கியர்கள் மற்றும் கியர் தயாரிப்புகளை தயாரிப்பதாகும். Ind AS 108 - இயக்கப் பிரிவுகளின்படி தனித்துவமான அறிக்கைக் கூறுகளுக்கு பிரிவுகள் இல்லை.
3. மார்ச் 31, 2024 மற்றும் மார்ச் 31, 2023 இன் முடிவடைந்த நிதியாண்டுகளின் கணக்கீட்டு காலங்களுக்கு புள்ளிவிவரங்கள், முழு நிதியாண்டுகள் தொடர்பான தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கும் அந்தந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை வெளியிடப்பட்ட ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளிவிவரங்களுக்கும் இடையிலான சமநிலை புள்ளிவிவரங்கள், வரையறுக்கப்பட்ட மதிப்பாய்விற்கு உட்பட்டு நிர்வாகமாகும்.
4. 2023-24 நிதியாண்டுக்கான 30 ஜூன்வரி 2024 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில், ஒவ்வொரு பங்குக்கும் ₹ 3 (மூன்று ரூபாய் மட்டும்) இடைக்கால வழங்கலை நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டது. 31 மார்ச் 2024 க்கு முன் செலுத்தப்பட்டது. மேலும், இயக்குநர்கள் குழு 09 மே 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 2023-24 நிதியாண்டுக்கு தலா ₹ 1/- ஒரு பங்குக்கு ₹ 2 (ரூபாய் இரண்டு மட்டும்) இறுதி வழங்கலை பரிந்துரைத்துள்ளது. வெளியேறும் போது பணியாளர் நலன்கள் மற்றும் பணிக்கு பிந்தைய பலன்கள் தொடர்பான சமூக பாதுகாப்பு குறியீடு,2020 (மீ கோட்) நடைமுறைக்கு வரும் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை மற்றும் அது தொடர்பான விதிகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. நிறுவனம் குறியீடு மற்றும் அதன் விதிகளை மதிப்பீடு செய்து, தாக்கத்தை மதிப்பிடும், ஏதேனும் இருந்தால், அவை செயல்பாட்டுக் வந்துவுடன் அதைக் கணக்கிடும்.
5. வேலையின் போது பணியாளர் நலன்கள் மற்றும் பணிக்கு பிந்தைய பலன்கள் தொடர்பான சமூக பாதுகாப்பு குறியீடு,2020 (மீ கோட்) நடைமுறைக்கு வரும் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை மற்றும் அது தொடர்பான விதிகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. நிறுவனம் குறியீடு மற்றும் அதன் விதிகளை மதிப்பீடு செய்து, தாக்கத்தை மதிப்பிடும், ஏதேனும் இருந்தால், அவை செயல்பாட்டுக் வந்துவுடன் அதைக் கணக்கிடும்.
6. முந்தைய காலகட்டங்களின் புள்ளிவிவரங்கள், தற்போதைய காலகட்டத்துடன் ஒப்பிடுவதற்கு தேவையான இடங்களில் மீண்டும் குழுவாக்கப்பட்ட/மறு-வகைப்படுத்தப்பட்டுள்ளன.
7. மேற்குறிப்பிட்ட நிதிநிலை முடிவுகள் www.shanthigears.com என்ற இணையதளத்திலும் கிடைக்கும்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 09 மே 2024

சாந்தி கியர்ஸ் லிமிடெட்டுக்காக
மு கருணாகரன்
முழு நேர இயக்குனர்
DIN: 09004843

குறையற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
இணையதளம் : www.tvsholdings.com தொலைபேசி : 044 - 28332115, மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com
CIN : L35999TN1962PLC004792

31 மார்ச் 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது				ஒருங்கிணைந்தது			
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	
		31.03.2024	31.03.2023	31.03.2024	31.03.2023	31.03.2024	31.03.2023	31.03.2024	31.03.2023
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	
1	மொத்த வருமானம்	407.18	638.42	1,646.56	2,206.72	10,133.78	8,533.53	40,282.02	33,690.33
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	251.43	150.64	415.19	235.97